**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**MCOP. No.7 / 2023**

**Dated: 23.06.2026**

Name : சீமைராஜா(PW1)

1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

மருத்துவமனையில் இருந்து வெளியில் வரும்போது நெத்தி , மூக்கு, வலது கால் முட்டியில் காயம் இருந்தது . இருசக்கர வாகனம் மோதியதால் மேற்படி காயம் ஏற்பட்டது. சம்பவத்தன்று நான் மேலக்கால் அரிசி முடையை ஏத்தி சென்றபோது விபத்து நடந்தது. விபத்து நடந்த இடத்திற்கும் மில்லிற்கும் இடையில் சுமார் 1.கீ.மி இருக்கும். டிரைவர் மணிகண்டன் அவர் உசிலம்பட்டியை சேர்ந்தவர் . நான் லோடு மேன். நான் அரிசியை ஏற்றி மேலாக்கால் சென்ற போது மழை ஆரம்பித்தது . லாரியில் இறங்கி தார்பாய் போட்டு அரிசியை மூடி நான் கயிறு போட்டுகட்டிக்கொண்டிருந்தேன். அது தேசிய நெடுஞ்சாலை. இடையில் சென்ரல் மீடியன் இருக்கும் ரோடு அகலம் சுமார் 43 அடி இருக்கும். ஒவ்வொரு திசையும் சுமார் 21.5 அடி இருக்கும். லாரியின் அகலம் சுமார் 8 லிருந்து 10 அடி இருக்கும். மழை வந்த உடன் வண்டியை நிறுத்தி விட்டார் . நானும்ம, ஓட்டுநரும் சேர்ந்து தார் பாய் போட்டுக்கொண்டிருந்தோம். டிரைவர் மேலே இருந்தார் நான் கீழே இருந்தேன் . இருசக்கர வாகனம் ஓட்டி வந்தவருக்கு காயம் ஏற்பட்டதா என்று நான் மயக்கமாக இருந்தால் எனக்கு தெரியாது . என் முதலாளியின் உத்தரவின் பேரில் வண்டியை நிறுத்தினோம் என்றால் மழை என்பதால் நிறுத்தினோம் . நானும் இருசக்கர வாகன ஓட்டுநரான ஜெயசிம்மனும் 108 ஆம்புலன்ஸ்யில் உசிலம்பட்டி மருத்துவமனைக்கு

சென்றோம். அங்கு முதலுதவி அளித்து எங்களை மேல்சிகிச்சை ராஜாஜி மருத்துவமனைக்கு மதுரைக்கு அனுப்பினார்கள் . 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். காயம் சரியானதால் Discharge ஆகிவிட்டேன். எனக்கு ஏற்பட்ட 3 காயங்களில் கொடுங்காயம் என்பது எனக்கு தெரியாது . X-Ray , Scan தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு S.S காலணியில் உள்ள சந்திரா பாய் மருத்துவமனையில் 30.08.2022 சிகிச்சைக்கு சென்றேன் . அதற்கான ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளேன் . கண்ணுக்கு ஆப்ரேசன் செய்தேன் . நான் மருத்துவமனையில் இருந்தபோது செக்கானூரணி காவல் ஆய்வாளர் அவரிடம் என் மனைவி தான் புகார் வாக்குமூலம் அளித்தார் . எத்தனை மணி என்று தெரியாது . தேதிய நெடுஞ்சாலையில் எனது வாகன ஓட்டுநர் தீடிரென வாகனத்தை நிறுத்துவது சட்டத்திற்கு புறம்பானது என்றால் ஓரமாக தான் நிப்பாட்டினார் . பார்க்கிங் லைட் போடாமல் நிறுத்தி இருந்ததாலும் கருமேகங்கள் சூழ்ந்திருந்ததாலும் தவிர்க்க முடியாமல் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியில்லை . எங்கள் வாகனம் நடு ரோட்டில் நின்றது தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல . செக்கானூரணி போலிசார் வாகனத்தை ஓரமாக எனது ஓனர் கேட்டுக்கொண்டதால் தள்ளி நிறுத்தினார்கள் என்றால் சரியில்லை . எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு எனது வாகனமான டாடா ACE TN 58BW0452 உரிமையாளர் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் சரியில்லை . தவறுதலாக இருசக்கர வாகனத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியில்லை . எங்கள் வாகனம் தவறான இருசக்கரவாகன ஓட்டுநருக்கு இறப்பு ஏற்பட்டிருக்கும் என்றால் சரியில்லை.

விபத்திற்கு காரணம் லாரி ஓட்டிநரரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியில்லை. இருசக்கர வாகன ஓட்டடுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியில்லை. இருசக்கரவாகன ஓட்டுநர் அவரது நண்பரிடம் வாகனத்தை வாங்கி மருத்துவமனைக்கு சென்று திரும்பினார் என்றால் சரியில்லை. எனவே 1 ம் எதிர் மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியில்லை. அதிகபடியான நஷ்டஈடு கற்பனையாக கேட்டுள்ளேன் என்றா'ல் சரியில்லை. எனக்கு சிறுகாயம் மட்டுமே ஏற்பட்டது என்றாலும் கொடுங்காயம் ஏற்பட்டது காட்ட ஆவணம் இல்லை என்றால் சரியில்லை . இருசக்கரவாகன ஓட்டுநருக்கு காயம் ஏற்பட்டதாக மற்ற சாட்சிகள் சொல்லியுள்ளார்கள் என்றால் சரியில்லை. இருசக்கரவாகன ஓட்டுநர் எடுத்த சிகிச்சைக்கு எனது வாகன உரிமையாளரின் செல்வாக்கால் செக்கானூரணி காவல் உதவி ஆய்வாளர் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியில்லை . நீதித்துறை நடுவர் எண் 2 உசிலம்பட்டியில் விபத்து சம்மந்தபட்ட குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான் . இருசக்கரவாகனத்தின் வந்தவர் உடல்நிலை சரியில்லாததால் ஊசி போட்டு மெதுவாக தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் அவர் அதிவேகமாக கவனக்குறைவாலும் வாகனத்தை ஓட்டிவர வில்லை என்றாலும் மழையின் காரணமாக விபத்து ஏற்பட்டதால் இருசக்கரவாகன ஓட்டுநர் மீது எந்த தவறும் இல்லை என்றால் சரியில்லை . விபத்து தெவாதீனமாக ஏற்பட்டது என்றால் சரியில்லை. 1 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் இல்லை என்றால்

சரியில்லை. எனவே இந்த மனு 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.06.23 06:18:14 +0530

Sub Judge,
Usilampatti.